ஒவ்வொரு மாதமும் பதின்மூன்றாம் திகதியிலன்று நூற்றி ஐம்பத்து மூன்று மணிச் செபம் ஓதியும் கீர்த்தனைகள் பாடியும் மரியாயின் விசேஷமைந்தர்களாக்க துணை செய்தான் வெள்ளிநாகமலையான்.

ஒவ்வொரு பதின்மூன்றாம் தினத்திலும் பக்திக்கிரிகைகளினால் அருள்வாழ்வித் தளைக்கவும் வேறு நன்மைகள் இறைவனின் அன்னை மூலம் கிடைக்கவும் துணையாக நின்றான் வெள்ளிநாகமலையான்.

இறை இரக்கத்தின் செபமாலை ஓதலினால் இறை இரக்கம் பெறவும் வேறு நன்மைகள் கைகூடவும் செய்தான் வெள்ளி வெள்ளிநாகமலை வேந்தன்.

நலன் புரிச்சங்கத்தினால் கஷ்டப்பட்டோர்க்கு கோழிவளர்ப்பு போன்றவற்றைச் செய்து கஷ்ரம் போக்கினான் வெள்ளிநாகமலை ராஜன்.

நலன் புரி மன்றத்தினால் கல்வியை வளர்த்தான் வெள்ளிநாகமலையப்பன்

நலன்புரிமன்றக் கூட்டங்களுக்கும் கூட மண்டபத்தைத் தந்தான் வெள்ளிநாக மலையப்பன்.

பல கல்விக்கும் வேறு கூட்டங்களுக்கும் கூட மண்டபத்தைத் தந்தான் வெள்ளி நாகமலையப்பன்.

நலன்புரி மன்றத்தின் கூட்டங்கள் ஆலய மண்டபத்தில் நிறைவுறுவதனால் எங்கள் சமயத்துக்கும் வேறு சமயத்துக்கும் நல்லிணக்கம் ஏற்படுத்தினான் வெள்ளிநாக மலையான்.

புதிய வியாபார நிலையமமைத்து பொருட்கள் வாங்கவும் விற்கவும் வரோணிக்கம், செபமாலை புத்தகங்கள் விவிலியப்புத்தகங்களினால் ஆன்ம நன்மையடையவும் உதவி செய்தான் வெள்ளிநாகமலை மன்னன்.

துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் இறந்தார்க்கும் வெள்ளிநாகமலையப்பன் பேரால் உதவிகள் செய்தால் வெள்ளிநாக மலையானும் பல மடங்கு எங்களுக்கு உதவி செய்வான்.

இறந்த ஆத்துமாக்களுக்காக வெள்ளிநாகமலையான் பேரால் பூசைகள் வைத்து மன்றாட்டுக்கள் செய்தும் தானதருமங்கள் செய்தால் இறந்த ஆன்மாக்களை வெகு விரைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரகதியடையச் செய்வான் வெள்ளிநாக மலையான்.

இரண்டாம் வஸ்ரிக்கான் சபையின் திட்டங்கள் நிறைவேறவும் புதிய திட்டங்களை மேம்படுத்தவும் உதவி செய்தான் வெள்ளிநாக மலையப்பன்.

வெள்ளிநாக மலை என்பது சுன்னாகத்தைக் குறிக்கும் பதம், எனவே வெள்ளிநாக மலையான் என்பது சுன்னாகத்தான் என்பது பொருள் (ஆராதித்த அருள் மழை பொழியும் அந்தோனியார்)

ஆக்கம்:
திரு.ஜெயராசா பொனிப்பாஸ்

## போர்த்துக்கீச தேசத்தவர் நீர் பர்னாந்தர்

போர்த்துக்கீச தேசத்தவர் நீர் பர்னாந்தர்
பல போர்களிலே பராமரித்தீக்க பர்னந்தர்.

சிங்கார சிங்காசனத்தில் நிற்கும் சிங்கார -எம்மை
சங்காரம் செய்யவில்லை சிங்கார.

பட்டாலை உடுத்திப்பவணிவரும் பதுவையப்பா - உம்மால்
உடைகளுக்கு ஏது குறைவு புதுமையப்பா சந்தண வாசனை வீசும்.

வாசனையை வீசச் செய்வாய் சுந்தரா - அருள் சௌந்தரா
செல்லடியில் சிரசை தந்தாய் செல்வந்தா.

சொல்லடியால் எம்மை திருத்துநீர் செல்வந்தா
கற்பினிலே உத்தமரே அற்புதரே எம்மையும் கற்பினில் உத்தமராக்கும் அற்புதரே.

ஏழைகளில் இரக்கங்கொண்டாய் ஏந்தலாடதாமும்
ஏழைகள் மேல் இரக்கங்கொள்வோம் ஏந்தலா.

மேற் குலத்தில் உதித்தவர் நீர் அற்புதா
கீழ்ப்படிவு கொண்டவர் நீர் அந்தோனி.

குருடர்களுக்குப் பார்வை கொடுத்தாய் பர்னாந்தா - எமக்கும்
நற்பார்வை தரும் பர்ணாந்தா?

செவிடரைக் கேட்கச் செய்தாய் பதுவைப் பதியா
நல்லதை கேட்கச் செய்வாய் பதுவைப் பதியா.

ஊமைகளைப் பேசச் செய்தாய் பதுவையரே
நல்லவற்றை பேசச் செய்யும் பதுவையரே.

பரலோகம் சென்ற பரிசுத்தா - எமையும்
பரலோகம் கூட்டிச் செல்லும் பரிசுத்தா.

அகதிகளாய் அலையும் நேரத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மேல் இரக்கம் வைக்கத் தவநவில்லை அந்தோனி.

மச்சத்துக்கு அறிவு சொன்ன அறிவு பெட்டகமே
எமக்கும் நல்லறிவு சொல்லுவீரே அறிவு பொக்கிஷமே.

வாசனை திரவியங்கள் ஊற்றப்படும் அருள் வாசனையே
எமக்கும் அருள்வாசனையை ஊற்ற வேண்டும் ஒளி வாசனையே.

பிச்சை பெற்றும் பிச்சையிட்ட பூபதியே
பரமனிடம் பிச்சை பெற்றுத் தாரும் பூபதியே.

மார்ட்டீனாரின் நல் மைந்தனே எம்மை
மாட்டவில்லை எதிலும் அற்புதரே.

அதிவிசேஷபுனிதப் பட்டம் பெற்ற அந்துவானே
அதிவிசேஷபுனிதராக்கியருளும் அந்துவானே.

மரியாயின் மீது விசேஷபக்திவைத்த புனிதரே
மரியாயின் மீது விசேஷபக்தி கொள்வோம் புனிதரே.

பாலனை கையில் ஏந்திய பரிசுத்தா - எம்மையும்
பரிசுத்தமாய் வாழவைப்பாய் பரிசுத்தா.

பிச்சை பெற்று பிச்சை போட்ட புண்ணியா - நாமும்
பிச்சைக்காரர் மேல் பாசம் வைப்போம் புண்ணியா.

பிரசங்கத்தில் கர்ச்சிக்கும் வீரசிங்கமே - உம்மையும்
கர்ச்சிப்போம் பிரசங்கத்தில் ராஜசிங்கமாய்.

குண்டுமழை பொழியும் பொழுதினில்
கண்டு மனம் இரங்கினாயே அந்தோனி.

உணவுகளை கொடுக்கும் உத்தமனே - உம்மால்
உணவுகளுக்கு என்ன குறை உன்னதரே.

கல்வியில் உயர் கலாநிதியே எம்மையும்
கல்வியில் உயர்த்தினாயே கல்விக்கடலே.

சாதி சமயம் பாராத சமராசா எமக்கு
சாதி மதச் சண்டை வேண்டாம் சற்குணா.

பிறசமயத்தவர் நம்பிக்கை வைக்கும் நலநம்பிக்கையே
பிறசமயத்தவர் நம்பிக்கை வைக்க நடப்போம் நல்லவரே.

பிறர்க்குதவி செய்யும் நல்ல நண்பனே
பிறருக்குதவி செய்வோம் நல்ல நண்பராய்.

நோய்களை நீக்கும் பெரும் மருத்துவரே
ஆத்தும வியாதிகளையும் விலக்கிடுவீர் வல்ல வைத்தியரே.

ஆக்கம் :

செல்வன்.போ.அன்ரனிலெம்பேட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விழா சிறப்புற மன்றத்தினரை வாழ்த்துகின்றோம்.....

வெதுப்பக உணவு உற்பத்தி

மற்றும் பலசரக்கு வாணிபத்தில்

சிறப்புடன் உங்களுக்காக

# பிள்ளையார் வெதுப்பகம்



ஜெற்மோட்டோஸ்
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.....

# அந்தோனியார் தையலகம்

கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

T.P.No : 0776347112

தரமான தையல் வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மன்றத்தின் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்

2013ஆம் ஆண்டிற்கான தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெதிய
எம் பங்கின் குழந்தைச் செல்வத்தைப் பாராட்டி வாழ்த்துவதோடு
அதிக புள்ளி பெற்று சாதனை படைத்த மாணவர்களையும் பாராட்டுகின்றோம்.



அன்ரன் அமலதாஸ் வைசிகா மேரி கெலன்
பெற்ற புள்ளி 171
மாவட்ட வெட்டுப்புள்ளி 154
யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை




இவர்கள் தொடர்ந்து கல்வி சமயம் மற்றும் பிற கிருத்திய செயற்பாடுகளில் தேர்ச்சி பெற்று தாய்மண்ணிற்குப் பெருமை சேர்க்க வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறி நிற்கின்றோம்.


சிறப்புற வாழ்த்துகின்றோம்.....

யூட்சன் பான்சி ஹவுஸ்

அழகுசாதனப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்
மற்றும் குழந்தைகளுக்கான
விளையாட்டு உபகரணங்கள்
அனைத்தையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய சிறந்த
ஸ்தாபனம்

**இல.19 ஜிம்மா முஸ்லேன்**
**யாழ்ப்பாணம்.**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ நாட்டுக்கூத்தின் இசை

கூத்தினை அதன் இயல்பு சார்ந்து வடமோடி, தென்மோடி என பிரித்து காட்டுகின்றார்கள், இந்தக் கூத்துக்களில் தென்மோடிக்கூத்து யாழ்ப்பாண கிறிஸ்தவர்கள் மத்தியில் முதன்மை பெறுவதை பார்க்கின்றோம். பொதுவாகக் கூத்துக்கள் திருநூல்களையும், புனிதர்களின் வரலாற்றையும் அடிப்படையாக வைத்து இறையியல் கருத்துக்களை உள்ளடக்கி கத்தோலிக்க சமய பாரத்பரியக் கொள்ளைகளைப் பரப்புரை செய்யும் நற்செய்திப் பணியாக அமைகின்றன இக் கூத்துக்களின் மூலமாக ஒழுக்க நெறி சிலவும், உலகியல் அறநெறியும் ஆழ்ந்திருக்க வேண்டிய விடையங்களும் புகட்டப்படுகின்றது. இவற்றில் பாடல்கள்தான் சிறப்புப் பெறுவதை பார்க்கின்றோம். முற் காலங்களில் ஒவ்வொரு அண்ணாவிமாருக்கம் சிறப்பான சரீரவளம் அமையப்பெற்றிருப்பதால் அவர்கள் இணைந்து நடிக்கும் போது பெரும் போட்டியே ஏற்பட்டுவிடும் பாடுகின் போது ஒருவர் ஒரு சுருதியில் பாடினால் மற்றவர் அதற்கு மேலாக பாடிடும் முறை இருந்தது. ஒரு வகை இசைப்போட்டியே அவர்கள் மத்தியில் காணப்பட்டது எனலாம். ஆரம்பகாலங்களில் வாத்தியமாக ஹார்மோனியம் கூத்துகளில் வாசிப்பது இல்லை என்ற காரணத்தினால் அவ்வளவாக பிரச்சனைகள் எழுவதில்லை ஆனால் இன்று வாத்தியமாக ஹார்மோனியம் இல்லாமல் கூத்து பாடல்கள் பாடமுடியாது சுருதி எல்லாம் கட்டுப்படுத்தப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு ஓர்கன் சேர்க்கப்பட்டது.

இராகங்கள் என்று கூறும் வழக்கம் பிற்பாட்டுத்தான் வழக்கத்தில் வந்தது பாடல்களின் தொடக்க சொற்களின் அடிப்படையைக் கொண்டு மெட்டுகளுக்குப் பெயரிட்டனர் யாப்பு இலக்கணத்தில் பெயர்களும் மெட்டுகளுக்கு ஆகி வந்தது ஏறத்தாழ 175 இராகங்களுக்கு மேல் தற்போது வழக்கில் உள்ளது இவைகளும் பல ஆய்வுகள் மூலாகத்தான் கண்டுபிடிக்கப்ட்டன.

கூத்து இராகம் தாளம் போடும் வழக்கம் முதன் முதலில் கத்தோலிக்க கூத்து மரபிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும் 1926 ஆம் ஆண்டு பதிப்பு செய்யப்பட்ட தேவசாகயம்பிள்ளை முதலாவது பதிப்பு நூலிலேயே முதன் முதலில் இராக தாளங்கள் இடப்பட்டுள்ளன. இசை நாடகத்தின் வருகையின் பின்னரே இவ்வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்இ ஆனால் கூத்தின் மெட்டுக்கள் கிராமியத்தின் வழிவந்த அடையாளங்களாலேயே இனங்காணப்படவேண்டுமென்பது இன்றைய ஆய்வாளரின் கருத்தாகும். நாமும் அக்கருத்துடன் உடன்பட்டு நின்றாலும் இதன் எதிர்காலப்பேணுகைக்கு சாஸ்திரிய வகைப்பிரிப்பு தேவையான ஒன்றாக உணரப்படுகின்றது. இதனால் இராக, தாள அமைவுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் த.றொபேட் அவர்களைக் கொண்டு ஆய்வு செய்து கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஆச்சரியமான விடயம் என்னவென்றால் கூத்து நூல்களில் போடப்பட்டுள்ள இராக தாளங்களில் 90% வீதமானவை தவறானவைகளானவே உள்ளன. பாடல் மெட்டுக்கள் மருவி மருவி காலத்தால் மாற்றமடைந்து வந்திருக்க வேண்டும் அல்லது முதன்முதலாக இராக தாளங்கள் இட்டவர்கள் பூரண இசை அறிவுடன் அவற்றை இடவில்லை. இந்த காரணங்கள் நடைபெறக்கூடியவை. அது மட்டுமன்றி பெரும்பாலான மெட்டுக்கள் சாஸ்திரிய கொண்டவை என்றே தான் கூறவேண்டும். எனவே பாடல் மெட்டுக்களின் சரியான இராக தாளங்களை ஆய்வு செய்து தற்போதுள்ள நிலையில் உள்ள இராக தாளங்களை இதில் இட்டுள்ளார்கள்.

இறை உணர்வு இசை உணர்வு, வாழ்க்கை அனுபவம் என்ற மூன்று பொருண்மைகளின் கூட்டமைப்பே கூத்துப் பாடல்களில் காணப்படும் இசைப்பாடல்களில் பொருளுண்மை எனலாம் கூத்துக்களில் இசையின் பங்கு உரை நடையில் பங்கை விட அதிகமாக சுருக்கக்கூறின் விளங்கவைக்கும் யுத்திக்கும் பாத்திரத்தின் வெளிப்பட்டிற்கும், பாத்திரத்தையும், பார்வையாளரையும் இணைக்கும் ஓர் சாதனமாகவும் இசைப்பாடல்கள் அமைந்திருக்கின்றன. கூத்தின் தொடக்கம் இசையோடு கூடிய துதிப்பாடலாகக் தொடங்கி இடையில் பல வகையான விருத்தங்கள், தருக்கள் போன்ற உறுப்புக்களினால் உருப்பெற்று இறுதியில் மங்களம் என்ற பொருண்மையோடு கூத்து இசை பின்னிக்கிடக்கும் அமைப்பினை காணமுடிகிறது. அந்தவகையில் கூத்துக்களில் பல்வேறு விதமான இராகங்களும், தாளங்களும் பயின்று வருதல் மரவு குழுமியிருக்கின்ற காரணத்தால் கதாநாயகன் முதல் வில்லக் பத்திரம் வரை தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் தங்களின் உணர்ச்சிகளை மற்றவர்கள் புரிந்து கொள்ளும் படியாக அமைத்துக் கொள்வதற்கும் இசையே சாதனமாக அமைகிறது.

இந்த வகையில் முதற்காலங்களிலும் எமது பங்காகிய சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒளி விழா நிகழ்வுகளின் போது பலவிதமான கூத்துக்களை முன்வைக்கப்படுவது வழக்கம் அதே பாரம்பரியம்மாக நீண்டகாலங்களுக்குப் பிறகு பல்வேறுபட்ட நெருக்கடிகளும் இடர்களும் யாழ் மண்ணை சூழ்ந்து நிற்கும் இக்காலப்பகுதியில் மரபு, வழியாக பேணப்படும் கிறிஸ்தவ கத்தொலிக்க கூத்துக்கள் தற்போது முன்வைக்கப்படுகின்றன. இது எமது பங்கிற்கும் மக்களுக்கும் ஒரு பெறுமையை தேடித்தரும் வகையில் 2011ம் ஆண்டு இளைஞர்களின் ஒன்றிணைப்பில் கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய கூத்தும் 2013ம் ஆண்டு தந்தையர்களின் கூட்டமைப்பால் ஏமாற்றம் அடைந்த ஏரோது என்ற தலைப்பிலும் முன்வைக்கப்பட்டது.

எழுத்தாக்கம்: அ.கிளேறா மரியசாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.....

# துர்க்கா சுப்பர் மாக்கட்

220, பெரிய மதவடி, சுன்னாகம்

அனைத்து வகையான குளிர்பானங்கள்
பலசரக்குப்பொருட்கள்,
குழந்தைகளுக்கான பொருட்கள்,
அழகுசாதனப்பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்

இவை அனைத்திற்கும் நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்

0776440923



விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.....

# Jeevan Medical

மருந்து வகைகள், பால்மா வகைகள்,
அழகுசாதனப்பொருட்கள், குளிர்பான வகைகள்
மற்றும் ஏனைய அத்தியவசியப் பொருட்கள்

இவை அனைத்திற்கும் நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்

Dr,Subramaniam Road,Chunnakam.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்கம் தொடர்பாக அறிய தகவல்கள்

❖ இமாசலத்தின் அமர்நாத் நல்வினை (புன்னிய) ஷேத்திர பண்டிதர்கள் கூறுவர்கள்.

13வயதில் இயேசு நடுவ கிழக்கை விட்டு காஷ்மீர் பள்ளத்தாக்கில உளழ்வத்தில் (தியானத்தில்) ஈடுபட்டார் என திபேத்திய மொழியில் எழுதப்பட்ட ஒரு நூல் இமாசலத்தில் 14000 அடி உயரத்தில் ஒரு துறவிகள் மடத்தில் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் அதனை முதலில் ரஷ்யா மொழிபெயர்த்தனர். பின் ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தனர். அதன் பெயர் "பிறர் தெரிந்திராத இயேசுவின் வாழ்க்கை பூட்டுவம் (இரகசியம்)" சென்றாண்டு சாது சுந்தர் சஙிஎன்ங ஒரு சீக்கியரின் கனவில் இயேசு கிறிஸ்து அழைத்ததாகவும் வரலாறு உண்டு.

❖ ஆசியாவிலே திருச்சபையின் திருப்பீடத்தில் கீழ் வரும் உரோமைச் செயலகத்தில் பணியாற்றிய முதலாவது ஆள் பாரத்தின் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேருட்திரு.துரைசாமி சைமன் லூர்து சாமி ஆவார்.

எருசலேம் நகரில் தமிழ் மொழியில் கிறிஸ்து கற்பித்த உருவேற்றல் (ஜெபம்) அடங்கிய கற்பலகை இவரின் முயற்சியால் 1982ம் ஆண்டு வைக்கப்பட்டது.


சுன்னாகம் புனித அந்தோனியார்
இளையோர் மன்ற விளையாட்டுவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்.....

**வாழ்த்துவோர்:**

SINGER (Srilanka)P.L.C சார்பாக

SINGER Plus

சுன்னாகம் கிளை
இல.136,கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.




உனது பிறப்பு ஒரு சம்பவமாகலாம்
ஆனால்
உனது இறப்பு சரித்திரமாகட்டும்
அணு விஞ்ஞானி : அப்துல்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மா

நிறைந்த கருணை
அதிக பாசம்
கவனப் பார்வை
அணைத்தெடுக்கும் கைகள்
இத்தனையும் கொண்டவள் தான்
என் முத்து அம்மா அவள்

நான் அதிகம் நேசித்த
ஆசான் அவள்
நான் முழுதாய் தொட்ட
பூமி அவள்

அழகளகாய் கதைகள் எல்லாம்
அவள் எனக்கு சொல்லுவாள்
பசி கொண்ட போதெல்லாம்
பாசத்தால் வயிறு நிறைப்பாள்

பாடசாலை கதைகளும் தான்
பழங்கால கதைகளும் தான்
அலுக்காமல் கேட்ட
முதல் நண்பி அவள் தான்

அவள் ஓர்
ஏழைத்தாய்தான் - ஆனாலும்
வரங்கள் எனக்கு
நிறையவே தந்தாள்

ஐந்தோ ஆறோ
படித்தவள் தான் - ஆனாலும்
அவள் போல் அறிஞரை நான்
இதுவரையும் பார்த்ததில்லை

கந்தல் துணிதான்
கறுப்பு மேனி தான்
கட்டி அணைக்கையிலே
அத்தனையும் இரத்தினம் தான்.

ஆக்கம் :- அ. அமென்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளசுகளே விழித்திடுமின்

ஒரு சமுதாயத்தில் முன்மாதிரிகையாக திகழ வேண்டியவர்கள் பெற்றோர், பெரியோர்களே ஆவார். இவ் வகையில் எமது சமுதாயத்தை நோக்குவோமேயானால், கல்வியறிவால் குறைவற்று விளங்குவதே இச் சமுதாயம் பல குடும்பங்களை ஒன்றிணைந்து பலமான சமுதாயமாக விளங்குகின்றது. "கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற கூற்றுக்கிணங்க எமது சமுதாயம் இன்னும் முன்னேற வேண்டிய நிலைமை அதிகளவில் காணப்படுகின்றது. இங்கு கல்வி அறிவை பெறுவோர் 100% ஆக காணப்படுகின்றது. இது எமது சமுதாயத்தின் கல்வி அறிவை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. ஆனாலும் பெருமூச்சு விட்டு எழுதுகிறேன். நல்லவன் இருக்குமிடத்தில் நலம் குன்றியவனும் இருப்பான். இளசுகளே இந்த உரையாடல் மூலம் நீங்கள் விழித்திடுங்கள்.

(நல்ல) பெரியவர் :- தம்பி நல்லவனாக வாழ வேண்டும். சமுதாயத்தில் நற் பிரஜையாய் உயர்ந்திடணும். நல்லதையே நினைக்கணும், இப்படி வாழ்ந்தால் சமுதாயமே எம்மை உயர்த்தி வைக்கும்.

சிறியவன் :- அப்படி என்றால் சேர் நல்லவனாய் வாழ என்ன செய்யணும்?

(நல்ல) பெரியவர் :- நல்லவனாய் வாழ்வது என்று ஒன்றும் புதிதல்ல. நல்ல கேள்வி, ஞான முடையவராய் யேசு பிரான் வாழ்ந்தார். அவர் நல்லதை செய்ய வேண்டும், நல்லதைச் சொல்ல வேண்டும், என்று நல்லதையே யோசித்தார் எம்முடைய முன்னோர் பலர் எமக்கு வழிகாட்டிகளாய் இருந்தவர்கள் தானே ஆகவே நாமும் அவர்களின் வழியில் சென்றால் உயர்வடைவோம்.

சிறுவன் :- பெரியவரே எனக்கு தெரிந்தவரைக்கும் பலர் தவறு செய்கின்றனரே

(நல்ல) பெரியவர் :- தவறு செய்வது மனித இயல்பு ஆனால் அத்தவறை மீண்டும் செய்யாது இருக்க வேண்டும். அத்தவறு அறியாமல் செய்திருக்கலாம் ஆனால் தவறுவிட்டவனை தண்டிப்பதை விடுத்து செய்ததற்கான காரணத்தை அறிந்து அவனை நல்வழிப்படுத்த முயலவேண்டும். சிறியவனாய் இருந்தாலும் பெரியவனாய் இருந்தாலும் தவறு செய்யும் போது அது தவறு என்பதை சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்த வேண்டும். ஒரு குடும்பம் என்றால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை சிறுவயதிலிருந்தே நற்பிரையைகளாய் வளர்த்தெடுக்க வேண்டும். தமது அறிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டு பிள்ளைகளுக்கு நேரிய வழியை காட்ட வேண்டும் இவ்வாறு செய்தால் தவறு விடுவது மிக்க குறைவாகவே இருக்கும்

சிறியவன் :- பெரியவரே நீங்கள் எனக்கு சொன்ன நல்ல செய்திகளுக்கு நன்றி

இவ்வாறு இவர்களின் உரையாடல் நடைபெற்றது. இவ் உரையாடல் மூலம் அந்த பெரியவரின் உயரிய மனதை அறிந்து கொள்ள முடிந்தது ஆனால் நல்லவனை தாழ்த்த நினைக்கும் இன்னொரு உரையாடலை பார்ப்போம்.

(நல்லகுணம்) குன்றியவர் :- நீ என்னடா சின்னப் பிள்ளைத்தனமாய் இருக்கிறாய் பெடியன் என்றால் தண்ணியடிக்கணும், தம் அடிக்கணும் அது தானடா அவன் அவனுக்கு புகழ் தண்ணியடிச்ச அதைபோல ஒன்று இருக்குதோ நீ கொஞ்சம் குடிச்சுப்பாரு உன்னையும் இப் பாருலகம் போற்றும். பெண்பிள்ளைகள் நீங்கள் குடித்தால் தான் திரும்பி பார்ப்பினம் குடித்தால் குடல் புழு எல்லாம் செத்துப்போகும் ஒருக்கா குடிச்சுப்பாரு.

சிறியவன் :- அப்படி என்றால் ஊரில் நல்லவர்கள் என்று செல்லுற எல்லோரும் குடிச்சு தம் அடிச்சவங்களோ

(நல்லகுணம்) குன்றியவர் :- என்னடா சொல்லுறாய் Aயை பார், Cயைப் பார், Eயைப் பார் இவர்கள் எல்லாம் அந்தக் காலத்தில குடி என்றால் சொல்ல ஏலாது குடிச்சதால தான் இப்ப இப்படி இருக்கிறாங்கள் சும்மா சொல்லுராங்கள் குடிச்சா தம் அடிச்சால் புற்றுநோய் வரும் என்று உது எல்லாம் பொய்யடா நான் குடிக்கிறேன் எனக்கு புற்றுநோய் இருக்குதோ அவனை பார் குடித்து விட்டு திரியிறான் அவனுக்கு என்னவன் வருத்தம் இருக்குதோ குடித்தால் தான் மற்றவங்கள் மதிப்பாங்கள்.

சிறியவன் :- நல்லவனாய் வாழ வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?

(நல்லகுணம்) குன்றியவர் :- எப்படி இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் சனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவன் என்று சொல்லமாட்டினம் ஆனால் குடிச்சுவிட்டு வந்து பார் உன்னை எல்லோரும் உயரத்தில் வைப்பினம். நீ குடிச்சால் பக்கத்தில இருக்க வெட்கத்தில் தூரப்போய் நிப்பினம் குடிச்சு தம்மடிச்சால் ஊரில எவ்வளவு மதிப்பு தெரியுமோ. குடிச்சுவிட்டு வந்தால் உடனே மரியாதையா கதிரை வைத்து உட்கார செய்வினம் பக்கத்தில வரவும் பயப்பிடுவினம் குடிச்சு தம் அடிச்சால் நல்லவன் என்று பெயர் வாங்கலாம்.

சிறியவன் :- அப்படி என்றால் ஏன் புகைப்பிடிக்க வேண்டாம் என்று எச்சரிக்கை செய்யினம் அந்த வஸ்சில் புகைப்பிடித்தால் ஆண்மை குறையும் என்று எழுதி இருக்கு.

(நல்லகுணம்) குன்றியவர் :- உந்த பஸ்சில எழுதிப் போடுறவங்கள் வேலை இல்லாதவங்கள் குடிச்சு விட்டு வந்தா எவ்வளவு மரியாதை தெரியுமோ என்ன கதைத்தாலும் மற்றவங்கள் அமைதியாய் இருப்பாங்கள் நீலப்படம் பாக்கவேண்டும், குடிக்க வேணும், தம் அடிக்க வேணும் பொம்புளை பிள்ளைகளோட சேட்டை விடவேண்டும் இது தான் ஆணுக்கு அழகு உன்னை மாதிரி உப்படி இருந்தால் யாரும் மதிக்க மாட்டினம்.

இவ்விதமாக உரையாடல் நடை பெற்றது.

இங்கு தான் இளசுகளே விழிப்படையுங்கள் உங்களை மீளாத் துன்பத்திற்குள் தள்ளி விடுவதற்கு சிலர் எந்தனிக்கின்றார்கள் ஒரு சமுதாயத்தில் பெரியவர்களே சிறியவர்களை வழிநடத்த வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். எனவே இப் பெரியவர்களுக்கு சமுதாயத்தின் வளர்ச்சியில் முக்கி பங்கு உண்டு உங்கள் பிள்ளையைப் போன்று மற்றவனின் பிள்ளையும் நல்ல நிலையில் வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒவ்வொரு பெரிய உள்ளங்களும் நினைக்கும் போது சமுதாயம் முன்னேற்றமடையும் என்பதோடு நல்ல குணம் குன்றியவர்களை போல் உங்களுக்கு யாராவது தெரிந்தால் அவர்களுடன் இவ் இளசுகளை சேர விடவேண்டாம், ஏனெனில் இவ் இளசுகளே எதிர்காலத்தின் பெரிய மனிதர்கள்.

ஆக்கம் :- A.A.R



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது மன்றத்திற்காக உழைத்தவர்களில்.........

## இவர்களை நினைவு கூருகின்றோம்..............

எமது மன்றத்தினால் நடாத்தப்படும் ஆலய திருச்சபை
மக்களுக்கான விளையாட்டு விழாவின் ஆரம்ப
கர்த்தாவாக உழைத்து நின்ற
அமரர் இ.பேரின்பநாயகம் அவர்களுக்கு
எமது அஞ்சலிகள்

மண்ணில்
06
10
1931



விண்ணில்
27
03
2013

எமது மன்றத்திற்காக உழைத்து நின்று
எமக்கு உறவுக்கரம் நீட்டி எம்முடன் இணைந்து பயணித்து
அகால மரணத்தைத் தழுவிக்கொண்ட
அமரர் அ.பிராங் அன் செலன் அவர்களுக்கு
எமது அஞ்சலிகள்

மண்ணில்
03
04
1980



விண்ணில்
24
07
2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

## பிலிப்பு செபஸ்ரியாம்பிள்ளை



மலர்வு
04 . 06 . 1948

உதிர்வு
11 . 02 . 2013

அன்பிற்கோர் தந்தையாய் பாசத்திற்கோர் உறைவிடமாய்
கருணைக்கோர் காவலனாய் காலமெல்லாம் எங்களுடன்
வாழ்ந்த அப்பா எம்முடன் வாழ்ந்த காலங்கள் போதுமென்றோ
காவலன் அழைத்தானோ கால்வழியில்

கண்ணீரில் கரைந்து கலங்குதப்பா எம்மிதயம்
கண்முன்னே உறவாட எம்முன்னே நீங்கள் இல்லையப்பா
கலங்கிடும் கண்களுடனும் கரைந்திடும் இதயத்துடனும்
உங்கள் முகம் தேடி வேதனையில்
தவிக்கிறோம் அப்பா

இறுதிவரை எம்மோடு இருப்பீர்கள் என்றிருந்தோம்
கனவாகிப் போனதப்பா காவியமாய் ஆனதப்பா
எங்குதான் சென்றீர்களப்பா
ஆயிரம் ஆண்டானாலும் அழியாது உங்கள் அன்பு

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டுகின்றோம்

குடும்பத்தினர்

# அன்புடன் நினைவு கூறுகின்றோம்

அமரர்
அகஸ்ரீன்
கிறிஸ்தோப்பிள்ளை

மலர்வு
02 · 02 · 1920

உதிர்வு
02 · 10 · 1993



அமரர்
கிறிஸ்தோப்பிள்ளை
மரிய சம்பூரணம்

மலர்வு
14 · 07 · 1924

உதிர்வு
16 · 01 · 2006

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 5ம் ஆண்டு நினைவலைகள்

"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும்
நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"









அன்பான ஊழியனாய் இருந்து
இன்சொல்லால் சுற்றத்தினை அணைத்து
இனிய புன்னகையால் யாவரையும் வசமாக்கி
வாழ்திட்டீர்
அல்லும் பகலும் அயராது - உழைத்தீர்
உறவுகள் சீர்பட வாழ்ந்தீர்
இறைவனடியில் நீர் இன்பமாய் இளைப்பாற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்

அமரர்
சிங்கராஜர் அலோசியஸ் தர்மராஜா
மண்ணில் : 24.10.1943 விண்ணில் : 12.10.2009

குடும்பத்தினர்

---

# அன்புடன் நினைவு கூருகின்றோம்

## எங்கள் அன்புப் பெற்றோர்கள்

அமரர்
ஆசீர்வாதம் அம்புறோஸ்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15.08.1924 | 21.07.1995 |

17 வது வருட
நினைவு







அமரர்
அம்புறோஸ் செபமாலை

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05.10.1928 | 11.11.1986 |

26 வது வருட
நினைவு

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" அரு:11:25

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூறுகின்றோம்.....



அமரர்
**பிலிப் ஞானமுத்து**
மண்ணில் 1929.02.16
விண்ணில் 1999.12.24



அமரர்
**ஞானமுத்து றீற்றம்மா**
மண்ணில் 1935.09.10
விண்ணில் 2001.05.01


எங்கள் நினைவுகளில் நீங்காத உள்ளத்திற்காய்
பொங்கிய கண்ணீரில் பொசுங்குகிறது எம் நெஞ்சம்
நாம் தேடுகின்றோம் அன்று எமக்காக ஒளிர்ந்து
கொண்டிருந்த எம் அன்புச் சூரியனை....

குடும்பத்தினர்

# நீங்காத நினைவில்.....

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

தோற்றம் - 1938 - 10 - 30



மறைவு - 1992 - 01 - 26

அமரர்
**அந்தோனிப்பிள்ளை அருளப்பு**

அமரர் அந்தோனிப்பிள்ளை அருளப்பன்
ஆண்டுகள் இருபத்திமூன்று போனதே – ஐயா
ஆறவில்லை எம் இதயம்
இன்றுவரை நம்ப முடியவில்லை – நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர்கள் என்று
புன்சிரிப்போடு எம்மை வளர்த்தீரே– உம்
புன்சிரிப்பை காண ஏங்குகின்றோம்
மறப்போமா உன் முகத்தை
ஆலயப் பணிதனிலே
ஆர்வத்துடன் துணை நின்றீர்
அக்கறையாய் எமை வளர்த்து
அன்புதனை எமக்கு அளித்து
மண்ணுலகில் உமது வாழ்வை முடித்து
விண்ணுலகில் இறைவனின் இணையடி
இணைந்திட வேண்டி நாம் நிற்கின்றோம்.

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.*

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நினைவு கூருகின்றோம்..........

| மலர்வு : | | உதிர்வு : | மலர்வு : | | உதிர்வு : | மலர்வு : | | உதிர்வு : |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1927 - 08 - 05 |  | 2005 - 10 - 01 | 1940 - 04 - 28 |  | 2008 - 11 - 24 | 1976 - 06 - 01 |  | 2005 - 04 - 01 |

அமரர்
**இராசரத்தினம்**

அமரர்
**சிவசித்திரபூபதி**

அமரர்
**செல்வமாணிக்கராசா**

மாந்தர் மனசினிலே
மாசற்றவராய் வாழ்ந்தீர்கள்!
மாண்புடனே மக்களுடன்
மகிழ்ந்திருந்த வேளைதனில்
மாயமாய் மறைந்த விந்தைதான் யாமறியோம்!
மனதுருகி மனம் நெகிழ
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சந்தை வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

# நினைவு கூருகின்றோம்...



மண்ணில்
04.09.1969
விண்ணில்
12.03.2007



மண்ணில்
18.11.1951
விண்ணில்
08.11.2009

அமரர். யோ. பெஸ்டானோ லவுறன்சியா
மரியசெல்வம்

அமரர். அ. மேரியூலியற்

உயிரும் உயிர்ப்பும் நாமே.
[யோவான்-11:25]

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூருகின்றோம்







அமரர்
பேதுறு சிமியோன்

அமரர்
சொமாலை சூசைப்பிள்ளை

அமரர்
பேதுறு செபஸ்தியாம்பிள்ளை

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்**
**விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"**

குடும்பத்தினர்

## உங்கள் உதவிக்கு சில தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| யாழ் போதனா வைத்தியசாலை | - 021 222 2260 |
| மத்திய இரத்தவங்கி | - 0212695728,0212692317 |
| தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம் | - 0212222375 |
| மோட்டார் வாகனத்திணைக்களம் யாழ்ப்பாணம் | - 0212223789 |
| ஆட்பதிவுத் திணைக்களம் யாழ்ப்பாணம் | - 0212225022 |
| விளையாட்டுத்திணைகளம் யாழ்ப்பாணம் | - 0212222233 |
| இலங்கை மனித உரிமை ஆணைக்குழு | - 0212222021 |
| யாழ்பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை | - 0212222278 |
| யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம் | - 0212222449, |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | - 0212222483, 3782 |
| யாழ்ப்பாண மின்சாரசபை | - 0212222609 |
| யாழ்ப்பாண தீயணைப்புப்பிரிவு | - 0212228888 |
| யாழ்ப்பாணபேருந்து நிலையம் | - 0212222281 |
| யாழ்பொலிஸ் நிலையம் | - 0212222222 |
| யாழ்பொது சனநூலகம் | - 0212226028 |
| யாழ்ப்பாண கல்வித் திணைகளம் | - 0212222647 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் புனித அந்தோனியார் இளையோர் மன்ற முன்னையநாள் தலைவர்கள்

1978 திரு செபமாலை யேசுதாசன்
1979 திரு அம்புறோஸ் றொபேட் பிறாண்சிஸ்
1980 திரு அம்புறோஸ் மரியரட்ணம்
1981 திரு ஜோர்ச் சாள்ஸ் ஞானேஸ்வரன்
1982 திரு சூசைப்பிள்ளை இருதயநாதன்
1983 திரு அந்தோனிப்பிள்ளை தெய்வேந்திரம்
1984 திரு வின்சென்ற் அல்பிறட்மரியதாஸ்
1985 திரு ஜேம்ஸ் லூசியன் மரிதாஸ்
1986 திரு அந்தோனிப்பிள்ளை அலோசியஸ் வின்சென்ற்
1987 திரு சூசைப்பிள்ளை இருதயநாதன்
1988 திரு சூசைப்பிள்ளை இருதயநாதன்
1989 திரு எவரஸ்ட்அருட்பிரகாசம்
1990 திரு அந்தோனிப்பிள்ளை கிரபைராசா
1991 திரு அமிர்ந்தநாதன் செல்வராஜன்
1992 திரு யேசுரட்ணம் ரட்ணபோஸ்
1993 திரு யேசுரட்ணம் ரட்ணபோஸ்
1994 திரு கிருஸ்தோத்தம் அன்ரனிராஜன்
1995 திரு திருஞானம் ஞானசீலன்
1996
1997 இடப்பெயர்வு
1998
1999 திரு அருளப்பு யூட்சன்
2000 திரு அருளப்பு யூட்சன்
2001 திரு அருளப்பு யூட்சன்
2002 திரு யாகப்பர் பிலிப்பிரேமதாசன்
2003 திரு ஜோர்ச் பிலிஞானேஸ்வரன்
2004 திரு பாலுப்பிள்ளை யஸ்ரின்யூட்
2005 திரு அல்பிறட் பிராங்அன்செலன்
2006 திரு அப்புறோஸ் கொன்சன்ரைன்
2007 திரு அப்புறோஸ் கொன்சன்ரைன்
2008 செல்வன் பரமநாயகம் லீனஸ் சகாயதாஸ்
2009 செல்வன் போல்சுகசெல்வா அன்ரனி நோபேட்
2010 செல்வன் கியோமர் மரியதாஸ் நிறோஜன்
2011 செல்வன் பே அன்ரன் பிறிட்டோ
2012 செல்வன் பே அன்ரன் பிறிட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் துளிர்க்கும் நன்றிகள்

சிந்தனை வடிவம்
செயல்திறன் முறைமையும்
இதழாகி கை தவழ
கரம் கொடுத்த அனைவருக்கும்
நெஞ்சுறைந்த நன்றிகளை
சொல்ல மடல் எழுதுகின்றோம்
காலத்தைக் கனியவைத்து
நேரத்தை ஒளிர வைத்து
வான தூதர் புடை சூழ
வானத்தில் இருந்த போதும்
வந்தெங்கள் அருகிருந்த
இறைவனுக்கு நன்றி.

விழாவின் விம்பத்தை
விரிவாக்கும் இவ்விதழை
வளர்விக்க ஆசிதந்து
செய்தி தந்த போஷகர் அவர்கட்கும்
வாழ்த்துச் செய்தி வழங்கிய
எம் மன்ற தலைவருக்கும்,
இதழ் ஆசிரியருக்கும்
விழாவோடு இதழ் சிறக்க
வாழ்த்தி நின்று விளம்பரங்கள்
தந்துதவி செய்தோர்க்கும்
எம் இதய நன்றிகள்.

இதனோடு இதழிற்காய்
மாற்றுதவி செய்தோர்க்கும்
ஆலோசனை பல தந்து
கரம் பிடித்த ஒவ்வொருவருக்கும்
இணைந்து வந்து அச்சேற்றும்
மகிந்தன் அச்சகத்தார்
அவர்கட்கும் உரித்தாகும்
எங்களது நன்றிகள்
ஆக்கங்கள் தந்து
ஆதரித்த உள்ளங்கட்கும்
மாற்றங்கள் தோற்றம் பெற
உழைத்திட்ட எம்மவர்கள்
எம்மன்ற உறவுகள்
அனைவருக்கும் எம் இனிய
மனம் நிறைந்த நன்றிகளை
தெரிவிப்பதோடு நாம்
மனநிறைவு பெறுகின்றோம்.

நன்றி
**மலர்க்குழு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூருகின்றோம்....

மலர்வு
04
09
1969




உதிர்வு
12
03
2007

## அமரர்
## யோ. பெல்டானோ லவுறன்சியா மரியசெல்வம்

எம் குடும்பத்தின் சூரியனை
எம் இல்லத்தில் இருந்து நீக்கி
எம்மை எல்லாம் சூனியமாக்கினாய்
உன் இழப்பின் தூதன் செய்தி
இன்றும் எம் காதில் ஓயாது
ஒலித்துக்கொண்டே இருக்க
அன்றுடன் நாமெல்லாம் நடைபிணமானோம்
ஐந்து வருடங்கள் கழிந்தது என்பது
காலத்தால் பொய் என தோன்றுகிறதே
ஆண்டவனின் இருப்பு பொய் என்றே
உன் இழப்பு நினைப்பில் தோன்றும்.
உன் இருப்பு ஆண்டவனின் வலப்புறத்தில் என்பதாலோ
இன்று நாம் மனிதராய் வாழ்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகிந்தன் கணனி அச்சகம் - சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org